பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

PUMP
with
Standard Accessories
Select



NEWTONE
Water Pumps

# உதயன்

விலை ரூ2/50

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

சுடர்: 4 சுக்கில ஆண்டு ஆடி மீ 14 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 25 (29 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 201

# ஊரடங்கு உத்தரவை மீறி தெற்கில் இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

## படையினர் சுட்டு 72 பேர் பலி!

கொழும்பு, ஜூலை 29
29 மணி நேர ஊரடங்குச் சட்டத்தை மீறி தென்பகுதியில் நேற்று இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

சட்டவிரோத ஊர்வலங்களைக் கலைக்க பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது 72 பேர் கொல்லப்பட்டனர்.

**பதுளையில்**

பதுளையில் ஊரடங்குச் சட்டத்தை மீறி இந்திய எதிர்ப்புச் சுலோகங்களை எழுப்பிய வண்ணம் சுமார் 800 பேர் வரை ஊர்வலம் சென்றனர். கூட்டத்தைக் கலைக்க பாதுகாப்புப் படையினர் சுட்டனர். அதில் ஒருவர் உயிரிழந்தார்.

**கண்டியில்**

கண்டியிலும் நூற்றுக் கணக்கானோர் இந்திய எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தினர்.

பாதுகாப்புப் படையினர் அவர்களைக் கலைக்க சுட்டனர்.

அதில் 4 பேர் மரணமடைந்தனர். 30 பேர் வரையில் படுகாயமடைந்தனர்.

**பிக்குகள்**

பெரும்பாலான இந்திய எதிர்ப்பு ஊர்வலங்களுக்கு பௌத்த பிக்குகளே தலைமை வகித்தனர்.

பௌத்த விகாரைகளுக்குள் பல இந்திய எதிர்ப்புக் கூட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்பாடா! முறுகல் தணிஞ்சு போனதால் சற்று மூச்சுவிடக் கூடியதாக இருக்குது...... இல்லாட்டால் எங்கடை சனம் தானே வீணுக் கஷ்டப்பட்டிருக்கும்...... !!

## இலங்கை இந்திய முறுகல் நிலையில் திருப்பம் - தணிவு

# அமைதிப்படை விலகல் இன்று மீள ஆரம்பமாகும்

## கால அட்டவணை, ஒப்பந்த அமுல் குறித்து பேச ரஞ்சன் குழு டில்லி செல்கிறது

கொழும்பு, ஜூலை 29

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருந்த முறுகல் நிலை தணிந்து திருப்பம் ஏற்பட்டுள்ளது.

✶ அமைதிப்படை விலகல், இன்று ஜூலை 29ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்.

✶ அதேவேளை அமைதிப் படையின் கட்டம் கட்டமான விலகலுக்கு ஒரு கால அட்டவணையைத் தயாரித்தல், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுலாக்குவது சம்பந்தமாக மீளாய்வு செய்தல் ஆகியன குறித்து இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தும்.

★ அதன் பொருட்டு வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின தலைமையில் விசேட தூதுக்குழு ஒன்று இன்று 29ஆம் திகதி புதுடில்லிக்கு விரைகிறது.

இலங்கை — இந்திய அரசுகள் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் இறுதிப் பகுதியில் பத்தரமுல்லையில் நடந்த மத வைபவம் ஒன்றில் பேசுகையில், ஜனாதிபதி பிரேமதாச, ஜூலை 29ஆம் திகதிக்கு முன்னர் இந்திய அமைதிப்படையை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று இந்தியாவிடம் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியது.

இந்தியா தான் ஏற்கனவே நடைமுறைப்படுத்திய கட்டம் கட்டமான படை விலகலையும் முற்றாக நிறுத்தியது.

நேற்று முன்தினம் இறுதி முயற்சியாக நடந்த ரஞ்சன்-மெஹ்ரோத்திரா பேச்சின் விளைவாக முன்கண்ட முடிவுகளும் எடுக்கப்பட்டன.

இந்திய-இலங்கை கூட்டறிக்கையின் பிரகாரம்—அமைதிப்படையை திருப்பி அழைப்பதை இந்தியா இன்று (சனிக்கிழமை) மீண்டும் ஆரம்பிக்க இருக்கிறது.

அமைதிப்படையினரை விலக்கிக்கொள்வது பற்றிய கால அட்டவணை பற்றிய பேச்சுக்களை நடத்த இலங்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு, ஜூலை 29
ஞாயிறு காலை வரை ஊரடங்குச் சட்டம்நீடிக்கப் பட்டிருப்பதாக அரசாங்கம் நேற்று இரவு அறிவித்தது.

ஊரடங்குச் சட்டம் வியாழன் இரவு கொண்டு வரப்பட்டது இது இன்று காலை 6 மணியுடன் நீக்கப்படும் என்று அரசு முன்னர் அறிவித்து இருந்தது. [இ-எ]

### ஜனாதிபதி கருத்து

இரு நாடுகளின் உறவில் புதிய திருப்பம் ஏற்பட்டு இருப்பதாக ஜனாதிபதி பிரேமதாச நேற்றுத் தெரிவித்தார்.

இரு நாடுகளின் உறவில் புதிய அத்தியாயம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக புதுடில்லியில் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்தார் (எ)

### நீர்வேலியில் கிரனேட் வீச்சு

கோப்பாய், ஜூலை 29
நேற்றுக் காலை 9.00 மணி அளவில் நீர்வேலி அமைதிப்படை முகாமுக்குச் சமீபமாக கிரனேட் வீச்சு இடம்பெற்றது.

இதனால் இப்பகுதியினூடாக சிலமணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. (இ-10-72)

### நவிண்டிலிலும் சம்பவம்

கரவெட்டி, ஜூலை 29
நவிண்டில் சாண்டா சந்தை முகாமை நோக்கி நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை கிரனேட் வீசப்பட்டது.

இதை அடுத்து ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

இரும்பு மதவடி சக்களாவத்தை, கொற்ருவத்தை பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. (ஒ-70)

**அடையாள நடவடிக்கையாக**

## திருமலையிலிருந்து புறப்பாடு

கொழும்பு, ஜூலை 29
இந்திய அமைதிப்படையின் ஒரு பிரிவு அடையாள நடவடிக்கையாக இன்று திருகோணமலை துறைமுகத்தில் இருந்து தாயகம் திரும்பும்.

அதற்காக சென்னையில் இருந்து இந்தியக் கப்பல் ஒன்று நேற்று திருகோணமலை நோக்கிப் புறப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இதே வேளை—
எவ்வளவு துருப்புக்கள் திரும்பிச் செல்லும் என்று கூறப்படாவிட்டாலும் ஒரு கப்பல் துருப்புக்கள் திரும்பிச் செல்லும் என்று தெரிகிறது.

கொழும்புப் பேச்சுக்கள் இந்தியாவுக்கு வெற்றியாகவும் இலங்கை அரசுக்கு பின்னடைவாகவும் கருதப்படுவதாக பி. பி. சி. செய்தியாளர் திரு. நட்டால் நேற்று வர்ணித்தார்.

★ ஜூலை 29க்கு முன்னர் சகல துருப்புக்களையும் இந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

**யாழ்ப்பாண ஊரடங்கு:**

## அரச அலுவலகங்கள் மட்டும் இயங்கவில்லை

### ஏனையவை வழமை நிலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 29
நேற்று யாழ் மாவட்டத்தில் அரச அலுவலகங்கள் இயங்கவில்லை.

நாடு முழுவதும் ஊரடங்கு என அரசு விடுத்த உத்தரவை அடுத்தே அலுவலகங்கள் இயங்கவில்லை.

அதே நேரம் கடைகள் திறக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துக்கள் நடைபெற்றன.

பொதுமக்கள் சர்வ சாதாரணமாக நடமாடியதையும், வழமை போலத் தமது அலுவல்களில் சுறுசுறுப்பாக ஈடுபட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. (இ-3)

## பஸ் ஊழியர்கள் வேலைக்குச் செல்ல மறுப்பு!

கரவெட்டி, ஜூலை 29
வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை சாலை (டிப்போ) ஊழியர்கள் கடமைக்குச் செல்ல மறுத்து வருவதாகத் தெரியவருகிறது.

கடந்த மூன்று நாட்களாக பருத்தித்துறை சாலை பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதத்தில் பஸ் நடத்துநரும், மெக்கானிக் ஒருவரும் கொலையுண்டதை அடுத்தே ஊழியர்கள் வேலைக்குச் செல்ல மறுத்து வருகின்றனர்.

தமது உயிருக்கு உத்தரவாதம் அளித்தால் மட்டுமே கடமைக்குச் செல்ல முடியும் என ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-160-70)

## வடமராட்சியில் ஹர்த்தால்

வல்வெட்டித்துறை, ஜூலை 29
வடமராட்சியில் நேற்று ஹர்த்தால், அனுஷ்டிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலேயே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

வடமராட்சியில் அனேகமான பகுதிகள் வெறிச்சோடியே காணப்படுகின்றன. மக்கள் நடமாட்டமும் மிகக் குறைந்து காணப்படுகிறது. (ஒ-160)

## அமைதிப்படை நடவடிக்கைகள் தொடரும் ஸ்ரீலங்காப்படை முகாமில் இருக்க வேண்டும்

### இந்திய அமைதிப்படைத்தளபதி கல்கத் நேற்றுத் தெரிவிப்பு

இந்திய அமைதிப்படை வடக்கு—கிழக்கு மாகாணத்தில் தற்போது எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடரும்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள ஸ்ரீ லங்காப் படைகள் முகாம்களுக்குள்ளேயே இருக்கவேண்டும்.

இலங்கையில் உள்ள இந்திய அமைதிப் படையினரின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் நேற்று திருமலையில் செய்தியாளர் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைதியைப் பேணுவதில் அமைதிப்படை தொடர்ந்து பணியாற்றும்.

எந்த நிலையையும் சமாளிக்க அமைதிப்படை விழிப்புடன் செயற்படும்.

இப்படி லெப்டினன்ட் ஜெனரல் கல்கத் நேற்றுத் தெரிவித்தார்.

லெப்டினன்ட் ஜெனரல் கல்கத் மேலும் சொன்னதாவது:

வடக்கு- கிழக்கில் ஆயுதக் களைவு நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அமைதி காக்க கொடுக்கப்பட்ட பணி தொடர்ந்து செயற்படுத்தப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அமைதிப்படை அதிகாரியின் சடலம்

யாழ்ப்பாணம் ஜூலை 29
இந்திய மத்திய ரிசேவ் பொலீஸ் அதிகாரி ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

எந்தச் சம்பவத்தில் இவர் மரணமானார் என்பது குறித்து இச் செய்தி எழுதப்படும் வரைதெரியவரவில்லை. (இ-10)

**சுபநேரம்**
**29—07—1989**

ஆடி 14— சனிக்கிழமை
நக்ஷத்திரம்; மிருகசீரிடம்
சுபநேரம்;
03.03 முதல் 04.33 வரை
ராகுகாலம்;
09.03 முதல் 10.33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்;

### நிகழ்ச்சி நிரல் தயாரானல்..

இந்தியப்படை விலகிச் செல்லும் நிகழ்ச்சி நிரல் ஒப்புக்கொள்ளப்பட்டால் தாமும் யுத்தநிறுத்தம் செய்யத் தயார் என்று தம்முடன் பேச்சுக்களில் ஈடுபட்ட தமிழ்ப் போராளிகள் குழு தெரிவித்ததாக இலங்கை வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின கூறினார்.

பி.பி.சி. நேற்றிரவு தனது செய்திக்குறிப்பில் இதனைத் தெரிவித்தது.

### சஞ்சீவி இல்லை

மின்சாரத் தடை காரணமாக இவ்வாரம் சஞ்சீவியை வெளியிட முடியவில்லை. அதற்குப் பதிலாக உதயனைப் பிரசுரித்துள்ளோம்.

— ஆசிரியர்.

**நயினாதீவுக் கடலில் கொல்லப்பட்ட**

## இளைஞர்களின் சடலங்கள் ராணுவத்தால் அடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 29
நயினாதீவுக்கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான இரண்டு இளைஞர்களின் சடலங்களும் அவசர காலச் சட்டத்தின் கீழ் இராணுவத்தினரால் அடக்கம் செய்யப்பட்டன.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் 26ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

இரு இளைஞர்களும் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோதே சுடப்பட்டனர்.

நயினாதீவைச் சேர்ந்த கந்தையா யோகராசா (வயது 27) செல்வராசா ஈஸ்வரன் (வயது 18) ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

சமீபத்தில் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகாலச் சட்

(6ஆம் பக்கம் பார்க்க)

**வடக்கு கிழக்கு அமைதிக்கு**

## எல்லாக் குழுக்களின் ஆதரவையும் தேடுவேன்

### ஜனாதிபதி பிரேமதாச கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 29
வடக்கு - கிழக்கில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எல்லாம் மேற்கொள்வேன்.

அதன்பொருட்டு சகலரதும் ஒத்துழைப்பையும், ஆதரவையும் கேட்பேன். சகல குழுவினரையும் சேர்த்துக்கொள்வேன். எந்தக் குழுவினரையும் மறந்தும் விட்டுவிடமாட்டேன்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

தமது வேண்டுகோளை ஏற்று இந்திய அரசு இன்று (29 ஆம்

(6ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிறிது காலம் பாவித்த Robin Engine (Ey-15) விற்பனைக்குண்டு: Water Pumb or Generator க்கு பாவிக்கக் கூடியது. தொடர்பு: ''இராஜம்'' சம்பியன்லேன், கொக்குவில். (K.K.S. Road இல் இருந்து நான்காவது வீடு) (11640)

National G 1 (Genlock) வீடியோ கமரா விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: பாரத் வீடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (11622)

V. M. S. R. Hen Farm புரொயிலர் பேட்டுக் கோழிகள் விருத்துக் குஞ்சுகள் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒரு நாள் புரொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகளை பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். No. 36, பலாலி றோட், கந்தர் மடம், இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். (11617)

### வீடு விற்பனைக்கு

தெல்லிப்பளைச் சந்தியில் இருந்து மகாஜனக் கல்லூரிக்குச் செல்லும் வீதியில் 200 யார் தூரத்தில், யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் 3 படுக்கை அறைகளைக் கொண்ட வீடும், 10 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. காணி சிறிய துண்டுகளாகவும் விற்கப்படும். தரகர்கள் வரவேற்கப்படுகின்றனர். தொடர்பு: ராகவன், 26, தர்மாமுல வீதி, வெள்ளவத்தை. (581011)

### மாதிரி வினாக்கள்

க. பொ. த. சாதாரண தரத்துக்குரிய பலமாதிரி வினாக்கள் அடங்கியதும் 1988 டிசம்பர் வினாக்களும் விடைகளும் கொண்ட கணிதப் புத்தகம் பூபாலசிங்கம் புத்தக சாலையிலும் ஸவாதீஸ் சுண்டிக்குளியிலும் விற்பனையாகின்றன: ஆசிரியர் T. நவநீதன் 57, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (11639)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/3007)

புரொயிலர் பேடுகோழி சேவல் விருத்துக் குஞ்சு சூப் குஞ்சு விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும்: பெண்டம்கோழி முட்டை, வான்கோழி முட்டை விற்பனைக்குண்டு. V. K. S. பாம், 12, கனகசபை ஒழுங்கை, சிவலிங்கப்புளியடி, யாழ். இந்துக்கல்லூரி பின்பக்கம், யாழ்ப்பாணம். (11615)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (02 - 08 - 89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3/50) உடன் பதியவும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) குறிப்பு:- இரவில் குஞ்சுகளுக்கு லைட் அவசியமில்லை. (1326)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள். சேவற் குஞ்சுகள் 2 ஆம் திகதி புதன்கிழமையும் Hy Bro புரொயிலர் குஞ்சுகள் 3 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க, சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1327)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளை கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052)

### தேவை

உணவு பரிமாறுபவர்கள் (Stewards) தேவை. நேரில் வரவும். Old Park, Chinese Restaurant, 207, Old Park Road, Jaffna. [1321]

### மணமகன் தேவை

யாழ் இந்து வேளாளர் 34 வயது அழகு, குணம், செல்வம் கொண்ட கொழும்பில் தொழில் பார்ப்பவரும் கொழும்பில் வீடு உள்ளவரும் நன்முக ஆங்கிலம் பேசக்கூடியவரும் பொறுப்புகளற்ற நிலையில் விவாகரத்துப் பெற்ற பெண் நல்ல குணமுடைய மணமகனைத் தேடுகின்றார். பொறுப்புகளற்ற நிலையில் விவாகரத்துப் பெற்றவரும் வெளிநாட்டில் உள்ளோரும் கருதப்படுவர். சாதகத்துடன் முழு விபரங்களுடனும் தொடர்பு: No. 80, C/o உதயன். (11629)

### ஆசிரியர் தேவை

ஒரு மாணவனுக்கு தமிழ், இந்துசமயம், விவசாயம், சமூகக்கல்வி, சுகாதாரம் பயிற்றக்கூடிய A/L படித்தவர் அல்லது ஓய்வு பெற்றவர் ஞாயிறு காலை நேரில் வரவும்: 48/9, முதலாம் ஒழுங்கை, பருத்தித் துறைவீதி, யாழ்ப்பாணம். (11637)

### கல்வி

Personal Classes S. K. ஜீவமோகனின் (O/L) கணித வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10-00 மணிக்கு நடைபெறுகின்றன. தொடர்பு: I. E. T. 11 B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (விவேகானந்தா அச்சகத்துக்கு எதிர்மாடி). (11423)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஐந்தாவது) 30 - 07 - 89 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். நடந்து முடிந்த பரீட்சை வினாத்தாள்களை எமது கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், செங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக- யாழ்ப்பாணம். [1320]

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

## சிரமதானம் மூலம் பொதுமயானம் சுத்திகரிப்பு

சுன்னாகம், ஜூலை 29

சுன்னாகம் கொத்தியாகலடி பொதுமயானத்தைச் சுத்தமாகப் பேணும் நடவடிக்கைகளை கொத்தியாகலடி மயான அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

மயானத்தையும் அதன் சுற்றுடலையும் பராமரிக்கும் பணியில் முதற் கட்டமாக மயான கிணறு முழுமையாக சுத்திகரிக்கப்பட்டதுடன் மயானத்தின் பிரதான வாயிலில் இருந்த பற்றைகளும் அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மயான அபிவிருத்திச்சபையின் தலைவரும் வலி-வடக்கு அரச அதிபருமான திரு. இ. இராசையா தலைமையில் பிரமாண்டமான சிரமதான பணி மூலம் மயானம் சுத்திகரிக்கப்பட்டது.

சுன்னாகம் பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களும் இச் சிரமதானப் பணியில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-27)

# பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை; இன்றைய நிலை குறித்து கடிதம்

## ஈ. தொ. சம்மேளனம் முதல்வருக்கு அனுப்பியது

யாழ்ப்பாணம், ஜூலை 29

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் தொழிலாளர் பிரச்சினை, தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள விளைவுகள், எதிர்கால பாதிப்புகள் மற்றும் இன்றைய நிலைமைகள் குறித்து விரிவான, விவரமான கடிதம் ஒன்றை ஈழத் தொழிற்சங்க சம்மேளனம், முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:-

கடந்த பல வருடங்களாக பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இலங்கை அரசின் உதாசீனப் போக்காலும் வன்செயல், சிவில் யுத்த நிலைமைகளாலும் இயங்காமல் கைவிடப்பட்ட நிலையிலிருக்கிறது. இதனால் நாட்டுக்குத் தேவையான ஒரு தொழில் துறை அழிந்து வருவதுடன் அதில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பெருமளவு கஷ்டத்திற்கு உள்ளாகின்றார்கள் என்பது தாங்கள் அறிந்ததே.

இத்தொழிற்சாலை சம்பந்தமான பல விடயங்களையும், தொழிற்சாலை இயங்காததால் தொழிலாளர் அனுபவிக்கும் பல இன்னல்களையும் 28-2-89 இல் எமது ஈழத்தொழிற்சங்க சம்மேளனம் கடிதமூலம் தங்களுக்கு அறியத்தந்தது.

இத் தொழிற்சாலை, வடக்குக் கிழக்கு மாகாண அரசின் அதிகாரத்தின் கீழ் வருவதால் அதை இயங்க வைக்கவும், தொழிற்சாலையில் நிர்வாகச் சீர்கேடுகளை விசாரித்தறியவும் தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்குப் நியாயமான தீர்வு காணவும் வேண்டி ஈழத் தொழிற்சங்கசம்மேளனம் தங்களைக் கடிதமூலமும், நேரிலும் கேட்டிருந்தது.

ஆனால் இதுவரை மாகாண அரசோ அதன் தொழில் அமைச்சரோ அல்லது தாங்களோ எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஆகவே பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையினதும், தொழிலாளர்களினதும் பிரச்சினைகளை மீண்டும் ஒரு தடவை தங்கள் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

1. 1977 தொடக்கம் 1989 வரையிலான காலப்பகுதியில் இடம் பெற்ற நிர்வாகச் சீர்கேடுகள் பற்றி, சகல அதிகாரமும் உள்ள ஆணைக்குழு ஒன்று மூலம் விசாரணை செய்யப்பட வேண்டும்.

2. வன்செயல் பாதிப்புக்காக அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட இரண்டு வருட சம்பள முற்பணம் இத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

3. அரசாங்கத்தால் மறுபரிசீலனை செய்யப்பட்ட சம்பள உயர்வு, அரசாங்க வரவு, செலவு திட்டத்தின்போது, அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியருக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி ஆகியன தலைமைக்காரியாலய ஊழியருக்கு வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆலைத்தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

4. வன்செயல், சிவில் யுத்த சூழ்நிலையில் மற்றக் கூட்டுத்தாபனங்களில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது போல, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கும் விபத்துநிதி வழங்கப்பட வேண்டும்.

5. கோரக்கன் கட்டுக்குளத்திலிருந்து தொழிற்சாலைக்கு நீர் பெறுவதினால் அக்குளத்தை உடனடியாகப் புனரமைப்பு செய்யப்பட வேண்டும்.

6. தொழிற்சாலைக்கு நவீன இயந்திரம் பொருத்துதல் வேண்டும். (குறிப்பாக 'குக்கர் செல்'' இந்தியா) இவற்றிற்கான தகவல்களையும் ஆலோசனைகளையும் பரிமாறிக் கொள்வதற்காக, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை தொழிற்சங்கக் குழுவினரும் நாமும் தங்களைச் சந்தித்துப் பேச வசதியான காலத்தையும் நேரத்தையும் இடத்தையும் அறியத்தருமாறு ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் தங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில்

# புதிய பயிற்சி நெறி

## ஆரம்பிக்க முயற்சி

உருக்குக்கம்பி வளைத்தலும் பொருத்துதலுக்குமான பயிற்சி நெறி ஒன்று யாழ். தொழில்நுட்பக் கல்லூரியிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சி நெறியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கண்டி, கொழும்பு, ஆசிய தொழில்நுட்பக் கல்லூரிகளில் இந்தப் பயிற்சிநெறி ஏற்கனவே நடைபெற்று வருகின்றது.

பிரஸ்தாப பயிற்சி நெறிக்குத் தோற்றுவதற்கு க. பொ. த. சாதாரணதரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## மாவைக்கு நடைபஜனை

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன் கோயிலில் இருந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு ஞாயிறு அதிகாலை நடைபஜனை ஒன்று திவ்ய ஜீவனசங்கத் தலைவர் திரு. நா. முத்தையா தலைமையில் நடைபெற்றது. இந்த நடைபஜனையில் ஆண்களும் பெண்களுமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட அடியார்கள் கலந்து கொண்டனர். (ஒ- 31)



மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் (எம். ஏ. ஆர். ஆர்) மீனவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் பணியின் கீழ் 250 குடும்பங்களுக்கு மீன்பிடி வள்ளங்கள், இயந்திரங்கள் மற்றும் வலைகள், உபகரணங்கள் போன்றவற்றை வழங்கியது

மீனவர் ஒருவர் நன்கொடை பெறுவதைப் படத்தில் காணலாம்.

சங்கத்தின் தலைவர் வண. அ. சேவியர் குறூஸ் அடிகளார், செயலாளர் திரு. சின்கிலேயர் பீற்றர், திட்ட அதிகாரி திரு. பி. கே. செல்வராஜா ஆகியோர் உட்பட தலை மன்னார் பங்குத் தந்தை வண எல். மொன்பேட் அடிகளாரும் காணப்படுகிறார். (ஒ)

# எமது நாட்டு இசைக் கலைஞர்கள் தமிழகத்தவருக்குச் சளைத்தவரல்லர்

## இசை அரங்கேற்ற வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 29

'எம் இசைக்கலைஞர்கள் தமிழகக் கலைஞர்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர். அரசின் ஊக்குவிப்பு இன்மையால் அவர்கள் உயர்வு அடையாமல் இருக்கவேண்டிய அவலநிலை உள்ளது'.

இப்படிக் கூறினார் யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் பேராசிரியர் வி. சிவசாமி.

நல்லை ஆதீனத்தில் ஆலாபன சங்கீத சபையின் ஆதரவில் அண்மையில் நடைபெற்ற இசைக் கலைஞர் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் இசைஅரங்கேற்ற வைபவத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமான இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரங்கேற்றம் என்னும் மரபு எம்மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது. ஒரு கலைஞன் தான்கற்ற வித்தையை முதலில் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் வகையில் இவ் அரங்கேற்றம் அமைகிறது.


கடந்த 30ஆண்டு காலமாக இசைப்பணியாற்றிவரும் மருதனமடம் இசைக்கல்லூரி தற்சமயம் யாழ் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாகச் செயல்படுகிறது. இக்கழகம் நூற்றுக் கணக்கான இசைவல்லுநர்களை உருவாக்கி வருகிறது.

இப்படி அவர் கூறினார்.

இவ்வரங்கேற்ற நிகழ்ச்சிக்கு ரி. வி. பிச்சையப்பா வயலினும், திரு. ரி. ஜெயசுந்தரம் மிருதங்கமும். ஆர். சுப்பிரமணியமூர்த்தி கஞ்சிராவும், செல்வன் க. கண்ணதாசன் கடமும் வாசித்தனர். (இ-3)


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




Grant BJK&E PFL 1157

'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



## வெற்றிடம்

அச்சுக்கோர்ப்பாளர், இயந்திர இயக்குனர்.

அச்சுக்கோர்ப்பாளர் மற்றும் பிளேட்டன் சிலிண்டர் மெஷின்களுக்கு இயந்திர இயக்குனர்கள் தேவை. அலுவலக நேரத்தில் விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

அருண் பதிப்பகம்

இல 15, இரண்டாவது ஒழுங்கை
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/2920)


## 4 ஆம் நாள் நினைவஞ்சலி



தோழர் தருமராசா (சின்னவன்)

(ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர்)

| மாதாவின் மடியில்: | மக்களின் இதயங்களில்: |
|---|---|
| 19. 06. 1961 | 26. 07.1989 |

ஸ்ரீலங்கா அரசினால் படுகொலை செய்யப்பட்ட
எம் அருமைத் தோழனே!
தோழமைக்கும், ஒழுக்கத்திற்கும், நடைமுறைக்கும்
இலக்கணமாய்த் திகழ்ந்த ''சின்னவனே''
உனது இழப்பு எமது பாசறையை உலுக்கினாலும்
நாம் உறுதி குலையாது நிற்போமென
உன் நாமத்தால் சபதமெடுக்கின்றோம்.

நண்பர்கள், தோழர்கள்.

(சி- 2926)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

பொருள்:

மக்களுக்குரிய பண்பு இல்லாதவர், அரம்போல் கூர்மையான அறிவு உடையவராஞலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

உதயன்

இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
29 - 07 - 1989 த. பெ. இல. 23

## ஊரடங்கு எனும் ஆயுதம்

அரசியல் அவதானிகளும், மற்றையோரும் எதிர்பார்த்தது போலவே, அரசு ஊரடங்கு ஆயுதத்தைக் கையில் ஏந்திவிட்டது!

வியாழக்கிழமை நள்ளிரவு தொடக்கம் சனிக்கிழமை காலை 5 மணிவரை, 29 மணி நேரத் தொடர் ஊரடங்கை நாடு முழுவதிலும் அரசு அமுல் செய்தது. ஒரு சில மணி நேரக் குறுகிய இடைவேளையுடன் இன்றும் அது நடைமுறைப்படுத்தப்பட்டாலும் வியப்பில்லை.

இந்திய அமைதிப்படை விவகாரம் தொடர்பாக எழுந்துள்ள முறுகல் நிலையை அனுசரித்து, ஜூலை இறுதியில், தென்னிலங்கையில் நெருக்கடி தோன்றலாம். குழப்பங்கள் நிகழக்கூடும். வன்செயல்கள் இடம்பெறலாம். அவற்றைத் தணிக்க அல்லது தடுக்க அரசு ஊரடங்கு ஆயுதத்தைக் கையில் எடுக்கலாம். — இவை யாவும் பலரும் எதிர்பார்த்தவையே

நெருக்கடி நிலைமையைத் தணிக்கவும், தனது விரோதிகளைக் கட்டுப்படுத்தவும் அல்லது எதிர்க்கவும் எந்த அரசாங்கமும் ஊரடங்கு ஆயுதத்தை ஏந்துவது சகஜமாகி விட்டது. அதஞல் மக்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை, கஷ்டங்களை ஆட்சியில் உள்ளோர் புரிந்து கொள்வதில்லை. அதுவும் தொடரான ஊரடங்கால் மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலும், அலுவல்களைச் செய்ய முடியாமலும், அனுபவிக்கும் இன்னல்களை அரசு அதிகாரிகள் சிறிதேனும் கவனத்தில் எடுப்பதாக இல்லை.

நேற்றைய ஊரடங்கை அரசாங்கம் அறிவிப்பதற்கு முன்னர், ஜே. வி. பி. தனது ஊரடங்கு குறித்துத் தெரியப்படுத்தி இருந்தது. சனி. ஞாயிற்றுக்கிழமைகளில் (இன்றும் நாளையும்) தென்னிலங்கை மக்கள் வீட்டை விட்டு வெளியேறக் கூடாது என்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்திருந்தது.

தாம் வன்செயல்களைப் புரிவதற்கு வாய்ப்பாக, அந்த வன்செயல்களில் மக்கள் பாதிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படாமல் இருப்பதற்காகவே, ஜே வி பி. ஊரடங்கை அறிவித்திருக்க வேண்டும் என ஊகிக்க இடமுண்டு.

மக்களை வீட்டுக்குள் அடங்க வைத்து ஜே. வி. பி. யினரை அல்லது வன்செயல் புரிவோரை மடக்க அரசு நினைக்கிறது. தீவிரவாதக் குழுவும் அதே சிந்தனையுடன், படையினரை நேரடியாக எதிர்கொள்ள ஊரடங்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறது.

ஒருவர் அறிவிப்பை அடுத்தவர் முந்திக்கொள்ளும் அளவுக்கு, ஊரடங்கும் இப்போது அரசும் அரச விரோத சக்திகளும் தாம் மோதிக்கொள்ள அடிக்கடி பயன்படுத்தும் சாதாரண ஆயுதமாகிவிட்டதை இங்கு காண்கிறோம்.

மக்கள் நன்மை கருதியே ஊரடங்கு அமுல்செய்யப்படுவதாக அரசு கூறும். மக்கள் விரோதமாக அரசு நடப்பதால் அதனை எதிர்ப்பதாகக் கூறும் சக்திகளும், ஊரடங்கு குறித்து அவ்வாறே வியாக்கியானம் கூறும். ஆஞல் மொத்தத்தில் ஊரடங்கால் மக்கள் நலன்கள் கெடுக்கப்படுகின்றன. இயலாத ஒரு கட்டத்தில் மக்கள் உயிர்களையும், உடைமைகளையும் காப்பதற்காக, ஆகக் கடைசியாக அமுல் செய்யப்பட வேண்டியது ஊரடங்கு. ஆஞல் இப்போது அதுவே முதலாவது ஆயுதமாகக் கொள்ளப்படுகிறது.

ஜூலை மாதம் எப்போதும், இலங்கை மக்களுக்கு அவலம் தரும் மாதமாகவே பொதுவாக அமைவது உண்டு. இரத்தக்களரி உட்பட குழப்பங்கள், வன்செயல்கள் அந்த மாதத்தில் மலிவதுண்டு. இம்முறையும் ஜூலையில் அவலங்களும், துயரங்களும் மக்களை வாட்டின.

அடுத்து வரும் ஆகஸ்டும் அவலங்களுக்குக் குறைவில்லாத மாதமே. இந்த ஆகஸ்டும் அப்படி அமையாது பார்த்துக் கொள்ள அரசியல்வாதிகள் கண்காணிப்புடனும், கவனத்துடனும், மதிநுட்பத்துடனும், ராஜதந்திரத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு அவர்கள் அவ்வாறு செய்வார்களா? அல்லது தமது நலனை முன்னிறுத்தி மக்களைத் தொடர்ந்தும தத்தளிக்கவே விடுவார்களா? ஊரடங்கு ஆயுதத்தை அடிக்கடி கையில் ஏந்தி மக்கள் வாழ்வை வெட்டி வீழ்த்துவார்களா?

ஜூலை கழிந்து ஆகஸ்ட் பிறக்கும்போது நல்ல அறிகுறி ஏதாவது தூரத்தேயாவது தெரிய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

## அமைதிப்படை விவகாரம்:

# இலங்கையுடன் பேச்சு நடத்த ஒஸி ராஜீவிடம் கோரிக்கை

ஆகஸ்ட் மாதத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான அமைதிப்படையினரை வாபஸ் வாங்கும்படியும், எஞ்சிய படையினரை விலக்குவது பற்றி இலங்கையுடன் பேச்சுக்கள் நடத்தும்படியும் இலங்கை மக்கள் கட்சி இந்தியப் பிரதமரைக் கோரியிருக்கிறது.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றைக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு ஒஸி அபய குணசேகரா வெளியிட்டு உள்ளார்.

அமைதிப்படை முற்ருக பலக்கப்பட்டால் தமிழர் விகுதிகளில் பாதுகாப்பு இருக்காது என்று அச்சம் தெரிவிக்கப்பட்டாலும், அமைதிப்படை விலக வேண்டும் என்பதில் நாட்டில் ஒருமித்த கருத்து நிலவுகிறது.

ஆஞல் நாட்டில் நிலவும் அராஜகம், காட்டுமிராண்டித்தனம் பற்றிக் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்த நிலை நீடிக்க அனுமதிக்கப்படின் இந்தியாவுக்கு எதிரான சக்திகள், இப்பிரச்சினைக்குள் தலையிடும் வாய்ப்பு ஏற்படும். இது இந்தியாவுக்கே பெரிய பிரச்சினையாக உருவாகும்—

இப்படித் திரு. அபயகுணசேகரா அறிக்கையில் தெரிவித்திருக்கிருர். (ஒ-எ)

## புதிய உணவு ஆணையாளர்

கொழும்பு, ஜூலை 29

புதிய உணவு ஆணையாளராக திரு. என். ஏ. ஒபடகே நியமிக்கப்பட்டார்.

ஆணையாளராக இதுவரை பதவி வகித்த திரு கிரஹாம் திஸநாயக்கா அண்மையில் ஓய்வு பெற்ருர். (ஒ-எ)

## உபவேந்தர்கள் கருத்து

கொழும்பு, ஜூலை 29

தற்காலிக பட்டங்களை வழங்குவதை விடுத்து தகுந்த தொழில் வாய்ப்புக்களை இறுதியாண்டு மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கும்படி பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள், பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழுவுக்கு தெரிவித்துள்ளனர். (ஒ-எ)

## இந்தியத்தூதுவர் ஆட்சேபம்

கொழும்பு, ஜூலை 29

கொழும்பில் இந்திய வங்கிகள் மீது கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதல் சம்பவம் பற்றி இந்தியத் தூதர் திரு. மெஹ்ரோத்ரா இலங்கை அரசிடம் ஆட்சேபம் தெரிவித்திருக்கிருர். (ஒ-எ)

## டீசல் வராவிட்டால்

# சுழற்சி முறை மின்சாரத்துக்கும் ஆபத்து வரும் என எச்சரிக்கை

### மின்சார சபை அதிகாரி விடுக்கிருர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

மின்தடை காரணமாக சுழற்சி முறையில் சுன்ஞகம் மின் நிலையத்தால் வழங்கப்படும் மின்சாரத்துக்கும் ஆபத்துவரலாம் என்று மின்சாரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுன்ஞகம் மின்சார நிலையத்தில் ஜெனரேட்டரை இயக்கும் டீசலின் இருப்பு முடிவுறும் கட்டத்தை அடைந்துள்ளதே இதற்குக் காரணம்.

சுமார் 10 நாட்களுக்கு மட்டுமே டீசல் கையிருப்பு உள்ளதாகவும் அது முடிவடைவதற்குள் ரயில் மூலம் டீசல் கொண்டுவரப்பட்டாலே மின் விநியோகத்தைத் தொடரலாம் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக அநுராதபுரத்துக்கும்கூட மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் யாழ். மாவட்டத்துக்கு மட்டுமே மின்நிலையம் மூலம் மின்சார விநியோகம் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## ரூ. 10 லட்சம் நஷ்டம்

மட்டக்களப்பு, ஜூலை 28

வேலைநிறுத்தம் காரணமாக மட்டக்களப்பு போக்குவரத்துச்சபை டிப்போவுக்கு சுமார் 10 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (த-21)

## பஸ் பயணிகளுக்கு இனி புது மரியாதை கிடைக்கும்

கொழும்பு ஜூலை 29

பயணிகளை மரியாதையாக அழைப்பது எப்படி? இது சம்பந்தமாக உபயோகிக்கக் கூடிய வார்த்தைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை போக்குவரத்து அமைச்சு தயாரித்துள்ளது.

இந்தப்பட்டியலில் உள்ள வார்த்தைகளையே பயணிகளை அழைக்க அரசு மற்றும் தனியார் பஸ் ஊழியர்கள் பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

பஸ் ஊழியருக்கான நல்லொழுக்கக் கோவையில் இப்பட்டியலும் சேர்க்கப்படும்.

ஆங்கிலத்தில் Father, Mother, Uncle, Aunty Brother, sister என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக மஹத்மயா, நோஞ.பொடி மஹத்மயா,பொடிநோஞ, ஆகிய வார்த்தைகளையே உபயோகிக்க வேண்டும். என்ற அமைச்சு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஊழியர்கள் தமிழில் என்ன வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும் என்பது அதில் கூறப்பட்டிருக்கவில்லை. (ஒ-எ)

## வவுனியாவில்

# விவசாயப் பாடசாலை நிறுவக் கோரிக்கை

வவுனியா, ஜூலை 29

'குண்டசாலையில் அமைந்துள்ளது போன்ற விவசாயப் பாடசாலை ஒன்றை வவுனியாவில் அமைப்பதற்கு வடக்கு—கிழக்கு மாகாண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் இப்பகுதியில் நெல் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றையும் அமைத்துத்தரவேண்டும்'

மாகாணசபை உறுப்பினரும் வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளருமான திரு. பரமநாதன் பராபரன் வடக்கு — கிழக்கு மாகாண சபையில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

சபைத்தலைவர் திரு. ஆர். பொன்ராம் ராஜகாரியர் தலைமையில் சபையின் அமர்வு நடைபெற்றது. (க-164)

## நிலக்கண்ணி வெடித்து வீதியில் 4 அடி பள்ளம்

### போக்குவரத்து இடை நிறுத்தம்

கொழும்பு. ஜூலை 29

திருகோணமலைக்கு அருகில் முள்ளிப்பொத்தானையில் கடந்த செவ்வாய் இரவு இடம்பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதல் காரணமாக 4 அடி பள்ளம்வீதியில் ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாக அவ்வீதியால் நடைபெற்று வந்த போக்குவரத்துச் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

இந்திய அமைதிப்படையினர் பீரங்கி வண்டிகள் சகிதம் அப்பிரதேசத்தை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

இந்த நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் 18 அமைதிப் படை ஜவான்கள் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

## மட்டு. இ. போ. ச. ஊழியருக்கு

# சம்பள உயர்வு வழங்க அமைச்சுமானியம் வேண்டும்

மட்டக்களப்பு, ஜூலை 29

மட்டக்களப்பு போக்குவரத்துச்சபை டிப்போ ஊழியர்களுக்கு சம்பள உயர்வு மற்றும நிலுவைகள் வழங்குவது என்ருல் போக்குவரத்து அமைச்சு மானியம் வழங்க வேண்டும்.

இவ்வாறு டிப்போ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊழியர்களின் வழமையான சம்பளத்தை வழங்குவதற்கே நிதி நெருக்கடிகளை டிப்போ எதிர்நோக்குகின்றது.

75 பஸ்களில் 48 பஸ்கள் உதிரிப்பாகங்கள் இன்றி முடங்கிக் கிடக்கின்றன. இதுவும் நிதி நெருக்கடியின் ஓர் அங்கமே.

இந்நிலையில் சம்பள உயர்வு நிலுவைகளுடன் வழங்குவது இலகுவான காரியம் அல்ல என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஒ-த-21)

# ஆட்கொணர்வு மற்றும் மனித உரிமை மீறல் மனுக்கள்

### சட்ட உதவி ஆணைக்குழுவிடம்

கொழும்பு, ஜூலை 29

தென்பகுதியில் சகல ஆட்கொணர்வு மனுக்களையும் மனித உரிமைமீறல் மனுக்களையும் சட்ட உதவி ஆணைக்குழுவே கையாள இருக்கின்றது.

இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் இது சம்பந்தமான பணிப்புரையை விடுத்திருக்கிறது.

இப்பணிகளில் ஈடுபடும் சட்டத்தரணிகளுக்குகொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்தே இம்மாற்று வழியை இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் எடுத்திருக்கிறது. (இ-எ)

## பஸ் எரிப்பு

கல்முனை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் ஒன்று அண்மையில் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இச் சம்பவம் கடுக்காமுனையில் இடம்பெற்றது. (ஒ-21)

## புனித கயித்தார் ஆலயத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலய உற்சவம் இன்று சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 7 மணிக்கு முதல்நன்மை சிறுவர்களுக்கு அளிக்கப்பட்டு, மாலை நற்கருணைவிழா நற்கருணைப்பவனியோடு கொண்டாடப்படும்.

7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருச்சுரூப பவனியும் இடம்பெறும். இறுதியாக திருச்சுரூப ஆசிருடன் திருவிழா நிறைவு பெறும். (க)

## முல்லை., மன்னகண்டல் கிராமத்தில் இருந்து

# அகதிகளாக வெளியேறிய 50 குடும்பங்களுக்குக் காணிகள்

### உடையார்கட்டுப் பகுதியில் கிடைக்கும்

மாங்குளம், ஜூலை 29

முல்லைத்தீவு மன்னகண்டல் கிராமத்தில் இருந்து அகதிகளாக வெளியேறிய 50 குடும்பங்களுக்கு சுமார் 2 ஏக்கர் வீதம், உடையார்கட்டுப் பகுதியில் காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரச நிறுவனங்கள் அமைப்பதற்கும் பத்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள காணி இல்லாத மக்களுக்கும் காணிகள் வழங்குவதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். (ஒ-94)

## நல்லூர் உ. அ. அ. பிரிவில்

# மண்ணெண்ணெய் முத்திரைகள் பலருக்குக் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

நான்காவது தொடர் உணவு முத்திரைகள் தொகுதியுடன் வழங்கப்படும் மண்ணெண்ணெய் முத்திரை நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மக்கள் பலருக்கு வழங்கப்படவில்லை.

யாழ் செயலகத்தால், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உணவு முத்திரைத் தொகுதியுடன் போதியளவு மண்ணெண்ணெய் முத்திரைகள் அனுப்பி வைக்கப்படாததே இதற்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது. (ஒ த-51)

## மேலும் ஆயிரம் மருந்து வகைகளுக்கு விலைக்கட்டுப்பாடு

மேலும் ஆயிரம் மேலைநாட்டு மருந்து வகைகளை விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

மருந்து வகைகளின் விபரங்கள் இவ்வாரம் வெளிவரும் அரச வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ். மாவட்டத்துக்கு நியமனம் பெற்ருேர் பிரச்சினை:

# பிரதிக் கல்விப் பணிப்பாளரை ஆசிரியர்கள் குழு சந்தித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 29

வெளிமாவட்டங்களில் இருந்து கடந்த 10ஆம் திகதி முதல் யாழ் மாவட்டத்துக்கு நியமனம்பெற்ற ஆசிரியர்களின் குழு ஒன்று தாம் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் [illegible] திரு பெரியதம்பியுடன் கடந்த புதன்கிழமை பேச்சுக்கள் நடத்தியது.

மீளவும் முந்திய பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையில் உள்ளதால் இங்கு நியமனம்பெற ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் [illegible] ஆசிரியர்குழு பிரதிப்பணிப்பாளரிடம் [illegible] ஆசிரியர் விவரப் பட்டியலை திருகோணமலைக்கு அனுப்பி விரைவாக நியமனம்தர ஏற்பாடு செய்வதாகப் பணிப்பாளர் உறுதி கூறிஞர்.

சகல ஆசிரியர்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி கல்வித் திணைக்களத்தில் கூடும்படி ஆசிரியர்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-3)

## வாசகர் திருமுகம்

### நல்லூர் கொடியேற்றம் எப்போது?

ஆண்டாண்டு காலமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் ஆடி அமாவாசைக்கு அடுத்து வரும் ஷஷ்டி திதியில் கொடி ஏற்றமும் 25 ஆம் நாள் அமாவாசையில் தீர்த்தமும் நடைபெற்று வருவதுவழக்கமாகும்.

ஆஞல் இவ்வருடம் ஆகஸ்ட் 6 ஆம்திகதி பஞ்சமியில் கொடியேற்றி 30 ஆம் திகதி சதுர்த்தசி திதியில் தீர்த்தமும் நிகழ இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடமும் அதற்கு முன் இரண்டு வருடங்களாகவும் இவ்வாறே நடந்தது. அப்போது இப்பிழையை எடுத்துக்காட்டியும்நிர்வாகம் கவனிக்கவில்லை, சம்பந்தப்பட்டவர்கள் இம் மாற்றத்திற்குரிய காரணங்களைப் பகிரங்கப்படுத்துவார்களா?

வே. சின்னத்துரை,
இலங்கை சோதிட ஆய்வு மன்றம்.

### தொற்று நோய் அபாயம்

யாழ்.முதலாம் குறுக்குவீதி, பாங்ஷால் வீதி சந்திக்கருகில் அமைந்துள்ள தொழிற்சாலைகளிலிருந்து அகற்றப்படும் கழிவுப் பொருள்களினால் இப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

அருகேயுள்ள வடிகால்கள் சுத்தஞ் செய்யப்படாது அவற்றில் தேங்கியுள்ளநீரில் நுளம்புகள் பெருகி தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுப்பர்களா?

மக்கள் அன்பன்
யாழ்ப்பாணம்.

### கொடிகாமம் ரயில்நிலையக் குறைபாடுகள்

கொடிகாமம் ரயில் நிலையத்திலுள்ள குறைபாடுகளை நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு அடுத்ததாக வடபகுதியில் கூடிய வருவாயை ஈட்டிக்கொடுக்கும் ரயில் நிலையம் இதுவாகும்.

இங்கு தண்ணீர் வசதியுமில்லை,பயணிகள்பருகுவதற்கு குடிதண்ணீரும் கிடையாது. ரயிலை எதிர்பார்த்திருக்கும் பிரயாணிகள் உட்கார்ந்திருக்க போதுமான ஆசன வசதிகளும் இல்லை.

'பிளாட்பாரத்'தின் மேற்பாகக் கூரையினூடாக வானம் தெரிகிறது.

ரயில் நிலைய ஊழியர்களின் வசிப்பிடங்கள் சேதடைந்து ஊழியர்கள் தங்கள் குடும்பங்களுடன் வசிக்கும் வாய்ப்பின்றி அலைந்து திரியும் நிர்ப்பந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ரயில் நிலைய சுவர் மணிக்கூடு பழுதடைந்து காணப்படுகிறது. ரயில் நிலைய சுற்றுடலில் பற்றைகள் நிறைந்து காணப்படுகின்றன.

ரயில்வேப் பதி கவனத்திற்கு இவை.

—ஓர் அபிமானி
கொடிகாமம்

## கோதுமை உடன்படிக்கை

கொழும்பு, ஜூலை 29

இலகு கடனுதவித் (பி. எல் 480) திட்டத்தின்கீழ் இலங்கைக்கு 17 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான 30 ஆயிரம் மெட்ரிக்தொன் கோதுமை தானியத்தை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

இதற்கான உடன்படிக்கை ஒன்றில் நேற்று முன் தினம் கொழும்பில் இருநாடுகளின் பிரதிநிதிகளும் கைச்சாத்திட்டனர். (ஒ-எ)

## மீசாலையில் சுகாதார விழா

மீசாலை வடக்கு கிராம சேவை அலுவலர் பிரிவு மக்கள் சுகாதார விழாவை மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்தில் நடத்தினர்.

வித்தியாலய அதிபர் திரு. தா. இராமலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

விழாவில் போஷாக்கு உணவுப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (ஒ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்து விட்டது!

## "புது - அறிவொளி"

உயர்தர கலை / வர்த்தக மாணவர்களுக்கான
விஞவிடை வெளியீடு
விலை ரூபா: 25/-, வெளியீடு இல: I
யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்

**EAGLE BATTERY CHARGING CENTRE**
Siththankerny.

(புத்தகசாலைகளுக்கு தகுந்த சழிவு வழங்கப்படும்)
[C/3074]



## ஸ்டைரேபோம் உற்பத்திகளை (றிஜிபோம்) நாம் தயாரிக்கின்றோம்

- மீன் பிடிக்க உதவும் மிதப்புக் கட்டைகள், ஷீட்டுக்கள், மீன்கொண்டு செல்லும் பெட்டிகள், ஐஸ்கிறீம் கொள்கலன்கள், பைப், இன்சுலேஷன் மற்றும் பொதிகட்டும் பொருட்கள்

மற்றும்

**பொலிபிளெக்ஸ் உற்பத்திகளும் (ஆர்பிபோம்)**

குஷன்கள், மெத்தைகள், ஷீட்டுக்கள், ஸ்பொன்ஜ்கள் மற்றும் மெத்தை போன்றவற்றைத் தயாரிக்க உதவும் பொருட்களுக்கும்

- கவர்ச்சிகரமான சழிவுகள் வழங்கப்படும்.

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு முகவர்கள் தேவை.

தொடர்பு கொள்க:
**லங்கா பொலிமர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.,**
49, கெய்சர் வீதி, கொழும்பு-11.
246, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
29/1, போதிராஜ மாவத்தை, கொழும்பு - 11.
(பீப்பிள்ஸ் பார்க் கம்பிளெக்ஸ்)
தொலைபேசி: 421954, 530455



# ஆங்கிலம்

## பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள். புதுமையான முறையில் தபால்மூலம் தமிழில் ஆங்கிலம்படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி; தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

'I am an Engineering Student. Lack of English Knowledge makes it Impossible to read Extensively on our Subjects. But your Project is Helpful to me now I am Pretty Confidence that I can Speak English Fluently.

**Mr. Kathiravetpillai Sivathasan,**
Muthaliyar Valavu, Vathiry,
Karaveddy.

ஆங்கிலக்கல்வியினை இலகுவாகக் கற்றுக் கொள்ள பிறைட் கல்வி நிறுவனம் செய்யும் உதவி மேலானது. தங்களின் பாடத்திட்டம் அடிப்படை அறிவு இல்லாதவர்களையும் ஓரளவு மனிதனுக்கும் என்பதில் ஐயம் இல்லை. எனக்கு தங்கள் பாடத்திட்டம் மிகவும் உதவியது. நன்றி.

**திரு. எஸ். முகமட் இத்திரிஸ் பி. ஏ. (இலங்கை)**
171, பொது நூலகவீதி, மருதுமுனை,
கல்முனை.

தங்கள் நிறுவனத்தால் நடத்தப்பட்டுவரும் ஆங்கிலப் பயிற்சியில கல்விகற்றதால் எனக்கு ஆங்கிலம் பேசக் கூடிய நிலையும், மற்றவர்கள் கூறுவதைப்புரிந்து கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

**செல்வி கே. இந்திரகலா**
89, காரைக்காட்டு லேன், வண்/வட மேற்கு,
யாழ்ப்பாணம்.

ஆங்கிலப் பயிற்சியினைச் செய்து வருவதால் கூச்சமின்றி நாமும் ஆங்கிலம் பேசலாம் என்றதோர் புதிய உற்சாகமும், தெம்பும் பிறந்துள்ளது.

**செல்வி என். உமையாள்**
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

**BRIGHT TRAINING CENTRE,**
P. O. Box 162, COLOMBO.
(C/3072)


# தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள்

## அமைச்சர் காமினி தகவல்

கொழும்பு, ஜூலை 29
தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் நிர்வாக அதிகாரிகள், ஊழியர்களைப் பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் தூதுக் குழுக்களிடம் அமைச்சர் காமினி திஸநாயக்கா முன்கண்ட உறுதிமொழியை வழங்கினார்.

தோட்டத்தொழிலாளருக்கு அடிக்கடி விடுக்கப்படும் பயமுறுத்தல்கள் குறித்து தூதுக் குழுக்கள் அமைச்சரிடம் விளக்கிக் கூறின. (ஓ-எ)

### குருநகரில்

## புனித யாகப்பர் திருநாள் சிறப்பாக நடந்தேறியது

குருநகர் ஜூலை 29
குருநகர், புனித யாகப்பர் ஆலய நவநாள் கொண்டாட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடந்தேறின.

கூட்டுத்திருப்பலியில் பங்குத் தந்தை வண. பி. எம். இம்மனுவேல் வண. ஜெறோம் லம்பட், வண. அருமைநாயகம் வண. அன்ரனி பாலா, வண. மரிய செபஸ்ரியன், வண. எட்மன் மைக்கல் ஆகிய குருமார் கலந்து சிறப்பித்தனர்.

மாலை 5.00மணிக்கு திருச்சொருபப் பவனி நடைபெற்றது இரவு 7.30மணிக்கு நற்கருணை ஆசிர்வாதமும், 8.00 மணிக்கு சொரூப ஆசிர்வாதமும் இடம் பெற்றன. (ஓ-த-51)

## பச்சிலைப்பள்ளிப் பகுதியில் விவசாய சேவை நிலையம்

### ஊற்று நிறுவனம் அமைக்கும்

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கிருமிநாசினி, உரம் ஆகியவற்றை நியாய விலையில் வழங்கும் நோக்குடன் விவசாய சேவை நிலையம் ஒன்றை அமைக்க ஊற்று நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாயிகளுக்கு உதவும் பல வகைத்திட்டங்களை இந்நிறுவனம் நடைமுறைப் படுத்தவிருக்கிறது என்று அந்நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-த-3)

## தெற்கில் தொடரும் கொலைகள்

கொழும்பு, ஜூலை 29
சம்பஹாவில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் கேகாலையில் 4 பேரும் கண்டியில் 3 பேரும் கடந்தபுதன்கிழமை கொல்லப்பட்டனர்.

கேகாலையில் எரியுண்ட நிலையில் 5 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (இ-எ)

## கிளிநொச்சியில் பெண் கொலை!

வட்டக்கச்சி, ஜூலை 29
கிளிநொச்சி நகரில கடந்த புதன்கிழமை பகல் 11 மணியளவில் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் அம்பாள் குளத்தைச்சேர்ந்த துரைச்சாமி செல்வராணி (வயது27) எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-163)

## அரச ஊழியர் காப்புறுதி

கொழும்பு, ஜூலை 29
அரச சொத்துக்களையும் அரச ஊழியரையும் காப்புறுதி செய்யும்போது அரசுக்குச் சொந்தமான காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களில் மட்டுமே காப்புறுதி செய்ய வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)


## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

ஜனனம்:-
12 - 09 - 1969



சொர்க்கம்:-
01 - 05 - 1989

**அமரர் தி. பரதராஜன் (மொறிஸ்)**

எங்கள் செல்வமே! பரதா!!
எங்களுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறாய்
எங்களிடம் ஓடோடி வருவாயே
உன் வரவை வழிமேல் விழிவைத்துப்பார்த் திருப்போமே!

உனது பாதச்சுவடுகள் அழியுமுன்னே
உன் மரணச் செய்தி கேட்டு
கலங்கினோமடா
உன் சாவை அருகிருத்தி
உன் இலட்சியத்துக்காய் உழைத்தாயடா!

சாகசமாய்ப் பேசிடுவாய்
சிரித்துப் பேசிய நீ ஒரு நிமிடத்தில்
சிறகடித்துச் சிட்டாகப் பறந்து விட்டாயே!
சிரித்த வதனம்! கலகலத்த பேச்சு!!
இனி எங்கு காண்போமடா?

உன் வாழ்வு ஆத்தியடியில் முடிந்தாலும்
உன் குரல் வல்வைக் காற்றிலும் கேட்கிறது!
உன் சிரிப்பலைகள் உறங்கிப்போய்விட்டனவா?
மீண்டும் நீ வருவாயா? மீண்டும் நீ உதிப்பாயா?
எங்களுடன் சேர்ந்து வாழ்வாயா?

எங்கள் மொறிஸின் (தி. பரதராஜா) ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

[illegible] அக்காமார்,
வல்வெட்டித்துறை.

(C/3091)



## 4 வது வருட நினைவஞ்சலி



மண்ணில்: 1921 - 03 - 02
விண்ணில்: 1985 - 07 - 29

**திருமதி எவன்ஞலின் கனகம்மா குலசிங்கம்**

அன்பு மம்மி! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும், எங்கள் உள்ளத்தில் அன்புத் தெய்வமாகவே என்றும் இருப்பீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கும்,

அன்புக் கணவர்
அருமைப் பிள்ளைகள், மருமக்கள்,
ஆசைப் பேரப்பிள்ளைகள்.

''நந்தபவான்''
பண்டத்தரிப்பு
29 - 7 - 89

(1273)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்: 05 - 12 - 1926
விண்ணில்: 29 - 06 - 1989

**திருமதி முத்துக்குட்டி நாகமணி**
(பாலாம்மா)

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கின் போது நேரில் கலந்து கொண்டும், மலர்வளையங்கள் சமர்ப்பித்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் ஆறுதல் கூறியவர்களுக்கும், பலவகையிலும் உதவிகளும் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்:
கணவர், மகன், மருமகள்,
பேரன் நிஷாந்தன்.

32, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

(1239)



## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 3 - 7 - 1907
மறைவு: 19 - 7 - 1987
திதி: 29 - 7 - 1989



**அமரர் பொன்னம்பலம் நடராசா**
(காட்டர்)

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவு என்றும் எம்மைவிட்டு அகலாதிருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆடியாமடம்,
கொக்குவில்.

(11620)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பொதுத் தேர்தலுக்கு முன்னோடியாக

# ராஜீவ் அரசுக்கு எதிராக ஆகஸ்ட் முழுவதும் பிரசார இயக்கம் - பந்த்

## பத்து எதிர்க்கட்சிகள் தனித்தனி முடிவு

புதுடில்லி, ஜூலை 28

ராஜீவ் அரசுக்கு எதிராக மக்களின் ஆதரவைத் திரட்டும் மா பெரும் இயக்கம் ஒன்றை 30 நாள் நடத்தவும் ஆகஸ்ட் 30ஆம் திகதி 'பாரத் பந்த்' ஒன்றை நடத்தவும் எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய முன்னணி, நான்கு இடது சாரிக் கட்சிகள் பாரதிய ஜனதா கட்சி ஆகியன இத்தீர்மானத்தை தனித் தனியே எடுத்துள்ளன.

'இந்தியாவைக் காப்பாற்றும் தினம்' ஆக ஆகஸ்ட் 9 ஆம் திகதியை அனுஷ்டிக்கவும் எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

47 ஆண்டுகளுக்கு முன்னர் தான் இதே தினத்தில் (ஆகஸ்ட் 9) மகாத்மா காந்திஜி 'செய் அல்லது செத்து மடி' என்ற அழைப்பை நாட்டு மக்களுக்கு விடுத்திருந்தார்.

ஆகஸ்ட் மாதம் எதிர்க் கட்சிகள் நடத்தப்போகும் எதிர்ப்பு இயக்கம் வரப்போகிற பொதுத் தேர்தலுக்கான ஒத்திகை என்று எதிர்பார்க்கப்படுகிறது.



ராஜீவ்காந்தி

இதேவேளை, லோக சபையில் கூண்டோடு இராஜினாமாச் செய்த 12 எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் அரசுக்கு எதிரான பிரசாரங்களை முடுக்கிவிட தங்கள் சொந்தத் தொகுதிகளுக்குத் திரும்பிவிட்டனர். (எ)

### காங்கிரஸ் மாற்று நடவடிக்கை

புதுடில்லி ஜூலை 28

எதிர்க்கட்சிகளின் பிரசார இயக்கத்தை முறியடிக்க மாற்று உத்தி ஒன்றை தயாரிக்க இந்திரா காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு செய்திருக்கின்றது.

இது சம்பந்தமான ஆலோசனை கடந்த வியாழன் புதுடில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியின் அலுவலகத்தில் நடந்தது. (எ)

### பிறந்ததின உலக சாதனை

சென்னை ஜூலை 28

சைதாப் பேட்டையைச் சேர்ந்த பத்தொன்பது வயது இளைஞர் வி. ஸ்ரீனிவாசன் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெறத் தீர்மானித்தார். தனது பிறந்த தினத்தில் சாதனையை நிலை நாட்ட இவர்முடிவு செய்தார்.

தனது தீர்மானத்தை நண்பர்களிடம் கூறினார்:

தங்களுடைய நண்பர்களிடம இதைக் கூறும்படி நெருங்கிய நண்பர்களை ஸ்ரீனிவாசன் கேட்டுக் கொண்டார்:

பிறந்ததினம் (22.7.89) வந்தது. அன்று மேற்கு மாம்பலம் தபால் அதிபரிடமிருந்து ஸ்ரீனிவாசனின் தந்தை ஜி. வெங்கடேஸ்வரனுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது:

'உங்கள் மகனுக்கு 18,850 பிறந்ததின வாழ்த்துக்கள் வந்துள்ளன. அவற்றை ஒரு பையில் போட்டு சைக்கிள் ரிக்ஷோவில் விட்டுக்கு அனுப்பி வைக்கின்றேன்; ஏற்றுக்கொள்ளுங்கள்'—

இப்படி தபால் அதிபர் சொன்னார்.

இரண்டு தபால் ஊழியர்கள் அவற்றைக் கொண்டு வந்து ஒப்படைத்தனர்.

இச்சாதனை, உலக கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற அனுப்பி வைக்கப் பட்டுள்ளது: (எ)

### 'கடல் விழுங்கும்' ஆபத்தில் இருந்து தப்புவது எப்படி? சின்னஞ்சிறு தீவுகள் எழுப்பியுள்ள கேள்வி!

வாஷிங்டன், ஜூலை 28

பூமி வெப்பமடைவதா கடல் நீர் மட்டம் உயரப் போகிறது.

இதனால் சின்னஞ்சிறிய தீவுகள் பல கடலினால் பூரணமாக விழுங்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது;

ஆயிரத்து 190 தீவுக் கூட்டங்களைக் கொண்ட நாடு மாலைதீவு.

கடல்நீர் மட்டம் இரண்டு 2மீற்றர்உயர்ந்தால் போதும்; அத்தனை தீவுகளையும் கடல் விழுங்கி விடும்;

இது போன்று பசுபிக், கரிபியன் கடல்களிலும் பல தீவுகள் உள்ளன. அவையாவன: கயானா, கிரிபட்டி, ரொங்கா, குவாலு, ட்ரினிடாட், ரொபாகோ:

'கடல்விழுங்கும்' ஆபத்தில் இருந்து தப்புவது எப்படி? என்பதை ஆராய்ந்து மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க இந்த நாடுகள் அடங்கிய மாநாடு ஒன்று மாலைதீவில் வருகிற நவம்பர் மாதம் 14-18 ஆம் திகதிகளில் லண்டனில் உள்ள காமன்வெல்த் அமைப்பின் ஆதரவுடன் நடத்தப்படவுள்ளது.

ஐ.நா.வின் உறுப்பு நிறுவனங்களான சுற்றுப்புறச் சூழல்பாதுகாப்பு நிறுவனம், உணவு, விவசாய ஸ்தாபனம் ஆகியனவற்றின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

நீர்மட்டம் உயருவதற்கு ஏற்ப,முன்னரே நாட்டின் நில மட்டத்தை உயர்த்துவது, அபிவிருத்திப் பணிகளைக் கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளாமல் மத்திய பகுதிக்கு மாற்றுவது, கடலில் மூழ்கும் ஆபத்தில் உள்ள தீவில் உள்ள மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவது போன்ற நடவடிக்கைகளை எடுப்பது — ஆகிய விஷயங்கள் பற்றி இம்மாநாடு பரிசிலனை செய்து முடிவு எடுக்கும் என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

இலங்கையிலுள்ள

### இந்திய வம்சாவழியினர் விவரம் ராஜ்ய சபையில்!

புதுடில்லி ஜூலை 28

இலங்கைப்பிரஜைகளாக பதிவு செய்யப்படாமல் இலங்கையில் இருக்கும் இந்திய வம்சாவழியினரின் எண்ணிக்கை இவ்வாண்டு ஏப்ரல் முதல் திகதி அன்று 2 லட்சத்து 31 ஆயிரத்து 850 ஆகும் இதே திகதியில் இலங்கையில்] வசிக்கும் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் 82 ஆயிரத்து 824 பேர்.

இத்தகவல்கள் கடந்த வியாழக்கிழமை புதுடில்லி ராஜ்பசபையில் வெளியிடப்பட்டன. [ஒ- எ]

### இத்தாலி படத்துக்கு தங்கப்பதக்கம்

மாஸ்கோ, ஜூலை 28

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடந்த உலக சினிமாப் படவிழாவில் இத்தாலி படத்துக்கு தங்கப்பதக்கம் கிடைத்தது.

அப்படத்தின் பெயர் தி இசிகிள்திப்'

வெள்ளிப்பதக்கத்தை ரஷ்ய படமான 'மியூசியம் விசிட்டர்' பெற்றது.

சிறந்த நடிகை விருது தென்கொரிய நடிகை கான் - சு - யென்னுக்கும் நடிகர் விருது பின்லாந்து நடிகர் டூரோபகலா என்பவருக்கும் கிடைத்தது. (எ)

### சுவாமி சின்மயானந்தருக்கு இந்தோனேஷிய அரசு தடை

ஜாகர்த்தா ஜூலை 28

சுவாமி சின்மயானந்தர் விஜயம் செய்ய இந்தோனேஷிய அரசு தடைவிதித்தது:

சுவாமி சின்மயானந்தர் உலகநாடுகள் பலவற்றுக்குச் சென்று இந்துமதப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றார்:

அதன் ஒரு கட்டமாகவே சுவாமி சின்மயானந்தர் இந்தோனேஷியா செல்ல அனுமதி கோரினார்.

ஆனால் ஜனாதிபதி சுஹார்ட்டோ அனுமதி அளிக்க மறுத்து விட்டார்:

பெரும்பான்மையான மக்கள் இஸ்லாம் மதத்தவராக இருந்தும் ருஷ்டி விவகாரம் குறித்து இந்தோனேஷியாவில் குழப்பம் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# தலைமறைவான தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்க சீனாவில் அடையாளக் கார்ட் முறை அமுல்!

பீகிங், ஜூலை 28

தலைமறைவாகி இருக்கும் ஜனநாயக ஆதரவு கிளர்ச்சியாளரைக் கண்டுபிடிக்க சகல பிரஜைகளுக்கும்தேசிய அடையாளக்கார்ட்டுக்களை வழங்கும் திட்டத்தை சீன பாதுகாப்பு அமைச்சு அமுல் நடத்த உள்ளது.

சென்ற மாதம் 50 கோடி பேருக்கு அடையாளக்கார்ட் வழங்கப்பட்டு விட்டது.

எஞ்சியோருக்கு அக்டோபர் மாதம் ஆரம்பமாகும் முன்னர் அடையாளக்கார்ட் வழங்கப்பட்டுவிடும்.

16 வயதுக்கு மேற்பட்டோர் அனைவரும் அடையாளக்கார்ட் பெற்றுக வேண்டும் என்று பணிக்கப்பட்டு உள்ளது:

சகலருக்கும் அடையாளக் கார்ட் வழங்கப்பட்டு முடிந்த பின்னர். அக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் கிராமம் கிராமமாக அதிகாரிகள் சென்று அடையாள கார்ட்டுக்களைப் பரிசோதிக்கத் தொடங்குவர்.

இதனிடையில், பீகிங் பல்கலைக்கழகத்தில் புதிதாக மாணவர் அனுமதிக்கப்படுவதை கட்டுப்படுத்துவதென சீனா தீர்மானித்துள்ளது.

இதேவேளை —

கடந்த வார இறுதியில் பீகிங் பல்கலைக்கழக மாணவர்கள் அரசு உத்தரவை மீறி கூட்டம் ஒன்றை நடத்தினர்கள்.

இச் சம்பவம் தொடர்பாக சீனப் பொலீஸார் 100க்கு அதிகமான மாணவர்களைக் கைது செய்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர். (எ)

# கோடீஸ்வரர் அனன்த்கஷ்ஹொகி கோடி டாலர் பிணையில் விடுதலை

வாஷிங்டன், ஜூலை 28

உலகின் மிகப் பெரிய செல்வந்தரான அனன்த் கஷஹொகி என்பவரை அமெரிக்க நீதிமன்றம் ஒன்று நேற்று ஒரு கோடி டாலர் பிணையில் விடுதலை செய்தது.

பிலிப்பீன்ஸின் முன்னாள் ஜனாதிபதி பெர்டினன்ட் மார்க்கோஸுடன் சேர்ந்து அமெரிக்காவில் சட்டவிரோதமாக சொத்து வாங்கும் மோசடியில் ஈடுபட்டதாக கஷஹொகி மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சுவிஸ் அரசு இவரை இதற்காக கைதுசெய்து, அமெரிக்காவுக்கு நாடுகடத்தியது.(எ)

### சோவியத்தில் புதிய ரத்தம்

மாஸ்கோ, ஜூலை 28

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் சகல மட்டங்களிலும் புதிய ரத்தம் ஏற்றப்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோர்பச்சேவ் தெரிவித்தார்.

பழைமைவாதிகளை வெளியேற்றும் கட்டம் வந்து விட்டதாகவும் அவர் சொன்னார். (எ)

# உலகின் மிகப் பெரிய வங்கிகள் எல்லாமே ஜப்பானில்!

நியூயார்க், ஜூலை 28

உலகில் உள்ள பெரிய பத்து வங்கிகளும் ஜப்பானில் உள்ளன.

இப்பட்டியலில் அமெரிக்கா மற்றும் பிரெஞ்சு வங்கிகள் இடம்பெறவில்லை.

'அமெரிக்க பாங்கர்' என்ற சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டது:

உலகின் மிகப் பெரிய வங்கி எஸ்று டாய்-இச்சி காங்யோ வங்கி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் வரை இந்த வங்கிக்கு சொத்துக்களின் மதிப்பு 38 ஆயிரத்து 700 கோடி டாலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு உலகின் மிகப் பெரிய வங்கிகள் பட்டியலில் 10 ஆவது இடத்தைப் பெற்றிருந்த அமெரிக்காவின் மிகப்பெரிய வங்கியான சிட்டி கோர்ப், இந்த ஆண்டு பன்னிரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. (எ)

### சோவியத் படைகள் குறைப்பு

மாஸ்கோ, ஜூலை 28

ஹங்கேரியில் இருந்து மேலும் சோவியத் துருப்புக்களை விலக்கிக் கொள்ளப் போவதாக ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் அறிவித்தார்.

ஹங்கேரி தலைவர்கள் ரெஸோ நையர்ஸ், கரோலி குரொஸ் ஆகியவர்களுடன் இது சம்பந்தமாக திரு. கோர்பச்சேவ்பேச்சுக்கள் நடத்தினார்.

அப்போதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதே வேளை — 5 லட்சம் துருப்புக்களை ஒரு தலைப் பட்சமாகக் குறைக்கப் போவதாக சோவியத் யூனியன் அறிவித்ததை அதன் நாடாளுமன்றம் நேற்று அங்கீகரித்தது:

இந்த ஆண்டில் 2½லட்சம் துருப்புக்கள் குறைக்கப்படும் என்று சோவியத் பாதுகாப்பு அமைச்சர் டிமிட்ரி யாஸோவ் தெரிவித்தார். (எ)

★ இந்திய அரசியல்:

# மத்திய அரசு நிகழ்ச்சிகளை பகிஷ்கரிக்கும் இயக்கம்!

## ஜனதா தள் அறிவிப்பு

சென்னை, ஜூலை 28

மத்திய அரசாங்கம் நடத்தும் சகல நிகழ்ச்சிகளையும் பகிஷ்கரிக்கும்படி மக்களையும் பொதுசன தொடர்பு சாதனங்களையும் ஜனதாதள் உப தலைவர் ராமகிருஷ்ண ஹெக்டே கேட்டுள்ளார்.

ராஜீவ் அரசாங்கத்தை பதவி விலகச் செய்வதற்கான நிர்ப்பந்தத்தை இப் பகிஷ்கரிப்பு ஏற்படுத்தும் என்றும் திரு. ஹெக்டே தெரிவித்திருக்கிறார்.

லோகசபையில் இருந்து 93 எதிர்க்கட்சி எம். பிக்கள் இன்று வரை இராஜினமாச் செய்து விட்டனர்.

இதைத் தொடர்ந்து பகிஷ்கரிப்புக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

இந்திய பொதுத் தேர்தலில்

# காங்கிரஸுக்கு வாய்ப்பு இல்லை; முன்னாள் ஜனாதிபதி ஆருடம்

ஹைதரபாத், ஜூலை 28

வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸுக்கு பெரும்பான்மை கிடைக்காது என்று முன்னாள் ஜனாதிபதி நீலம் சஞ்சீவி ரெட்டி தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸுக்கு 220 இடங்கள்தான் தேர்தலில் கிடைக்கும். அதிக இடங்களைப்பெற்ற கட்சி என்ற முறையில் அரசு அமைக்கும் படி ராஜீவை ஜனாதிபதி அழைப்பார்.

தேசிய முன்னணியால் ஆட்சிக்கு வரமுடியாது. அதன் தலைவர்கள் ஆளுக்கு ஒரு பாதையில் செல்கிறார்கள்.

இங்கு எதிர்க்கட்சி எங்கே இருக்கிறது? எதிர்க்கட்சித் தலைவர் யார்? ஜனதாதள் 150 இடங்களைக் கைப்பற்றலாம்:

இப்படி நீலம் சஞ்சீவரெட்டி சொன்னார்: (எ)

### தமிழருக்கு சார்பாக தீர்ப்பு

லண்டன், ஜூலை 28

இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 5 இலங்கைத் தமிழர்கள் மீண்டும் தாமதம் இன்றி பிரிட்டன் திரும்ப அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று லண்டன் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரிய இந்த 5 தமிழரும் கடந்த பெப்ரவரி மாதம் பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்பட்டனர். (இ-எ)

### லெபனானில் 28 பேர் பலி

பேருட் ஜூலை 28

லெபனானில் இரண்டாவது நாளாக ... ஷெல் தாக்குதலில் 28 பேர் ... விக்கப்பட்டது: (எ)

### ரஸ்வன் ஜானிக்கு வெற்றிவாய்ப்பு

டெஹ்ரான் ஜூலை 28

ஈரான் ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெற்றது.

நாடாளுமன்ற சபாநாயகர் ரஃப்ஸன்ஜானியே நேரடிப் போட்டியில் வெற்றியீட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது: (எ)

### மீண்டும் தனிமாநிலம்

கல்கத்தா, ஜூலை 28


கூர்க்காலந்து தனிநாடுக் கோரிக்கை முன் வைத்து மீண்டும் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்படிருக்கிறது.

கூர்க்காவிடுதலைமுன்னணித் தலைவர் சாட்ரேசுப்பா இதனை அறிவித்தார்.

கூர்க்கா விடுதலை முன்னணித் தலைவர்களில் ஒருவரான சுபாஷ் கிஷிங்குக்கு எதிரான பிரிவே இப்போராட்டத்தை நடத்தப்போகிறது:

கூர்க்கா மக்களுக்கு தனி மாநிலம் அவசியம். இக்கோரிக்கையை விட்டுக்கொடுக்க மாட்டோம்; ஜனநாயக அடிப்படையில் எமது போராட்டம் நடைபெறும், நாம் ஆயுதம் தூக்கமாட்டோம் — இப்படி திரு. சாட்ரே சுப்பா தெரிவித்தார். (எ]


புரோட்டீன் நிறைந்த புரோட்டினெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.



பிரயாண ஏற்பாடுகள்

● ஜேர்மனி

(16 வயதிற்கு மேற்பட்டோரும் கீழ்ப்பட்டோரும்)

பிரயாண ஏற்பாடுகள் விரைவாக செய்து கொடுக்கப்படும்.

சவூதி அரேபியா, ஓமான், குவைத், அபுதாபி, பாஃரின்

ஆகிய நாடுகளுக்கு ஆண், பெண் இருபாலருக்கும் உரிய தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தித்தரப்படும்:

● சிங்கப்பூர்

சிங்கப்பூரில் தமிழ்க்குடும்பங்களில் வேலை செய்ய பணிப்பெண்கள் தேவை:

தொடர்பு கொள்க அல்லது நேரில் வரவும்:

சங்கர் ரவல் சேர்வீஸ்

இல. 63 (125), சிவன்கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பில் தொடர்பு கொள்ள முகவரி:

Garuda Enterprises
S 47-3rd Floor,
Colombo Central Supper Market.
COLOMBO - 11.
Tel No: 548922.

[சி 3104]



பிரயாண ஒழுங்குகள்

உடனடி வேலை வாய்ப்பு

சவூதிஅரேபியா

அல்ருஜ் கொம்பனி

| | | |
|---|---|---|
| 1. | கோழி பாம் கிளினேஸ் | 400 SR |
| 2. | பார டிறைவேஸ் | 650 SR |

S.O.M.C

| | | |
|---|---|---|
| 1. | ஆஸ்பத்திரி கிளினேஸ் | 350 SR |
| 2. | கொம்பனி டிறைவேஸ் | 650 SR |
| 3. | மேசன் | 650 SR |
| 4. | வெல்டேஸ் (5 வருட அனுபவம்) | 700 SR |
| 5. | தச்சு வேலையாட்கள் | 600 + 100 SR |

முக்கிய குறிப்பு.

தினசரி 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கந்தோர் திறக்கப்படும்.

(ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த)

(முற்பணம் அறவிடப்படமாட்டாது)

தொடர்பு:

நியூ யோக் ரவல்ஸ்,

மல்லாகம்.

[C-3106]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூபம்
[illegible]
பைக்கற் ரூபா ஒன்று மட்டுமே;
— ஓர் மில்க்வைற் தயாரிப்பு

உதயன்

29 · 07 · 1989 சனிக்கிழமை

'இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு'
என்னேயிட்டு முழுகுவதால்,
1. உடல் வலி நீங்குகிறது.
2. இளமையைப் பாதுகாக்கிறது.
3. கண்களைப் பாதுகாக்கிறது.
4. ஆயுளே விருத்தி செய்கிறது.
எண்ணெய் முழுக்குக்கு சிறந்த
ஒலிவ் ஸ்நானப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள்.
சிறிய பைக்கற் விலை ரூபா ஒன்று மட்டுமே.
— ஓர் மில்க்வைற் தயாரிப்பு

# ரியூட்டறிகளை திங்கள் முதல் திறப்பதற்கு முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

மாணவர்களின் கல்வி நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு தனியார் கல்வி நிறுவனங்களை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடத்துவதென்று தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர்.

நேற்றுக் காலை பொண்ட் கல்வி நிலையத்தில்' நடந்த கூட்டத்தில் மேற்கண்டவாறு முடிவுசெய்யப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை நீக்கும் வழிவகைகளை மேற்கொள்ள பணிப்பாளர் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

மாணவர் நலனில் அக்கறையுள்ள சகல அமைப்புக்களும் நலன்விரும்பிகளும் பூரண ஒத்துழைப்புத் தருமாறு தனியார் கல்வி நிலைய ஒன்றியம் வேண்டுகோள் விருத்துள்ளது. (3)

## திடீர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஸ்ரீலங்கா கடற்படையைச் சேர்ந்த அதிகாரிகளும் இந்திய அமைதிப்படையினரும் வட்டுக்கோட்டை அமைதிப்படை முகாமில் நேற்றுச் சந்தித்துப் பேசினர் என்று தெரியவருகிறது.

காரைநகர் ஸ்ரீலங்கா கடற்படை முகாமுக்கு எதிரே இந்திய அமைதிப்படையினரின் முகாம் அமைக்கப்பட்டது தொடர்பாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக அறியவருகிறது.

## சென்' ஜோன் முதலுதவிப் படை உறுப்பினர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்விட்டு சென்.ஜோன் முதலுதவிப்படை அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் நாளை 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

யாழ். பிரவுண் வீதியில் 179ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் நல்லூர் உற்சவக் கடமைகள் பற்றிய ஒழுங்கு முறைகள், ஆலோசனைகள், பழைய அங்கத்தவர்கள் மீள் பரீட்சை எடுத்தல் பற்றிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும், (இ-6)

## வர்த்தக ஊழியருக்கு அடையாள கார்ட்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அடையாளக் கார்ட்டுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை வர்த்தக ஊழியர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

அடையாளக் கார்ட்டுகளுக்கான விண்ணப்பப் படிவங்களை இச் சங்கம் இப்பொழுது விநியோகித்து வருகிறது.

சகல வர்த்தக நிறுவன ஊழியர்களையும் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-6)

## அமைதிப்படை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும்.

இந்தப் பணியில் எந்தச் சக்தியும் தலையிடுவதற்கு அமைதிப்படை இடமளிக்காது; விஷமிகள் கண்காணிக்கப்பட்டு தக்கபடி சமாளிக்கப் படுவார்கள்.

எந்தச் சக்தியாவது அமைதிப்படையின் பணியில் குறுக்கிட்டால் தக்கபதிலடி கிடைக்கும்.

### வடக்கு - கிழக்கும் ஊரடங்கும்

இலங்கை அரசின் ஊரடங்கு உத்தரவு தென்பகுதியில் ஜே.வி.பியினரைச் சமாளிக்கவே பிரதானமாகப் பிறப்பிக்கப் பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தேவைப்பட்டால் தான் அதுவும் மக்களுக்குத் தேவையற்ற தொல்லை ஏற்பட்டால் தான் அமைதிப்படை, ஊரடங்கு உத்தரவைச் செயற்படுத்தும்.

அமைதிப்படை, இலங்கையின் காலக்கெடுவின்படி வெளியேறுவது என்பது நடக்காத ஒன்று.

அமைதிப்படைக்குக் கொடுக்கப்பட்ட பணியில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள இலங்கை பாதுகாப்புப் படை முகாம்களுக்குள்ளேயே முடங்கியிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டியது என்பதும் ஒன்று.

இதனை யாராவது குந்தகப் படுத்த நினைத்தால் அதனைச் சமாளிக்க அமைதிப்படை தயாராக இருக்கிறது.

இப்படி லெப்டினன்ட்ஜெனரல் கல்கத் நேற்று சொன்னார். (இ-எ)

## அமைதிப்படை விலகல்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் விசேட தூதுக்குழு ஒன்று இன்று புதுடில்லிக்கு விசேட எயர் லங்கா விமான மூலம் செல்கிறது. புதுடில்லிப் பேச்சுக்களின்போது—

★ இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல் செய்வது பற்றி மீளாய்வு செய்வது.

★ இந்திய அமைதிப்படையினர் யுத்த நிறுத்தம் செய்வது.

★ வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல இன மக்களின் பாதுகாப்பு பற்றி ஆராய்வது.

ஆகிய விஷயங்களும் இடம் பெறும். இந்திய - இலங்கை அரசுகளின் சார்பில் நேற்று விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில்:

இந்தியா சார்பில் இந்தியத் தூதர் மெஹ்ரோத்திராவும் இலங்கை சார்பில் வெளியுறவுச் செயலாளர் பேர்னுட் திலகரத்னவும் கையொப்பமிட்டனர்.

இந்தியத் தூதருடன் நடத்தப்பட்ட பேச்சுக்களில் இலங்கை அரசி சார்பில் அமைச்சர் விஜேரத்தினவுடன் திரு. பேர்னுட் திலகரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் திரு. கே. எச். ஜே. விஜேதாஸ, சட்டமா அதிபர் சுனில் டி சில்வா, திரு. பிராட்மன் வீரக்கூன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### விசேட குழு

இன்று புதுடில்லி செல்லும் இலங்கை அரசுக் குழுவில் இடம்பெறும் உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, உயர் கல்வி 'விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அமைச்சர் ஏ. ஸி. எஸ், ஹமீது, வெளியுறவுச் செயலாளர் பேர்னுட் திலகரத்ன: ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன், சட்டமா அதிபர் சுனில் டி சில்வா, பீலிக்ஸ் டயஸ் அபயசிங்கா. (அ-எ(

## இளைஞர்களின்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டத்தின்கீழ் இந்த இருவரின் சடலங்களே வடக்கில் இவ்வாறு அடக்கம் செய்யப்பட்டன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-10)

## ஊரடங்கு.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டங்களை பிக்குகள் நடத்தினர்.

ஹெப்பிட்டிக்கொலாவ, மாத்தளை, குருநாகல ஆகிய இடங்களில் நேற்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களிலும் நாசகார நடவடிக்கைகளிலும் 20க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## திருமலையிலிருந்து .....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியா விலக்கவேண்டும்.

★ அமைதிப் படையினரின் தளகர்த்தராக ஜனாதிபதி பிரேமதாஸாவை இந்தியா ஏற்றுக் கொள்ளவேண்டும்.

★ உடனே வடக்கு-கிழக்கில் யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும்—

முன்கண்ட கோரிக்கைகள் பற்றி பேச்சுக்களின் பின் வெளியிடப்பட்ட அறிக்கையில் ஒன்றுமே கூறப்படவில்லை என்றும் பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்தார், (அ-எ)

## எல்லாக்...

திகதி முதல்) அமைதிப்படை விலகலை மீண்டும் ஆரம்பிக்க இந்தியா இணங்கியதற்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இந்தியாவின் இந்த முடிவினால், இந்தியப் படை இலங்கையை விட்டு ஒருபோதும் விலகாது என்று இலங்கை மக்கள் மத்தியில் நிலவிய அச்சம் நீங்கிவிடும் என்றும்—

இந்திய விரோத நிலைப்பாட்டை முன் வைத்து வேலை நிறுத்தம் மற்றும் நாச வேலைகளில் ஈடுபடுவதைச் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும்—

அவ்வாறான நடவடிக்கைகளால் இலங்கை மக்களே பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது என்றும்— ஜனாதிபதி தமது உரையில் தெரிவித்தார். (இ)

## ● நினைவலைகள் ●



மண்ணில்: 21-12-1947

விண்ணில்: 14-07-1989

செ. சச்சிதானந்தம்
[ சச்சி -- மட்டுவில் ]

சச்சி அண்ணா, சச்சி அண்ணாவென
அலைந்தோமே
உனது தேசப்பற்றும்,
அயராத உழைப்பும்
எம்மை என்றும் வழிநடத்துகின்றது.

— உனது பிரிவால் வாடும் —
மட்டுவில் -சரசாலை -நண்பர்கள்.

(11643)

## ● நினைவலைகள் ●



மண்ணில்: 22-12-1969

விண்ணில்: 22-07-1989

வல்லிபுரம் விமலேஸ்வரன்
[ ஈசன் -- ஆஷா ]
- சரசாலை -

தனது கல்வியை மறந்தான்
தாய், தந்தையரை மறந்தான்
தேசத்தின் அழுகுரல் கேட்ட -இவன்
இறுதியில் இம் மக்களையும், மண்ணையும்
நேசித்தான். தனக்கென வாழாது
தங்களுக்காக வாழ்ந்து வீரமறவனாக
இந்நாட்டில் சரித்திர நாயகனானான்.

சாவா / நண்பர்கள்.

(11644)

## மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

### உயர்திரு. குமாரசாமி துரைராஜா

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது கொக்குவிலில் வசித்தவருமாகிய உயர்திரு. குமாரசாமி துரைராஜா (ஓய்வு பெற்ற ஆங்கில தட்டெழுத்தாளர், கமத்தொழில் திணைக்களம், திருகோணமலை; தற்போது தட்டெழுத்தாளர், கிறிஸ்தவ திருச்சபை, சுன்னாகம்) அகால மரணமானார். அன்னார் கோமளேஸ்வரி (ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் தொலைத்தொடர்பு திணைக்களம், திருகோணமலை) அவர்களின் அன்புக் கணவரும், கமலலோஜினி (4ஆம் வருட மருத்துவபீட மாணவி, யாழ்-பல்கலைக்கழகம்), லிங்கேஸ்வரி (ஆசிரியை, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை). தயாசீலன், லோகநாயகம், சத்தியசீலன் (மாணவன், கொக்குவில் இந்துக்கல்லூரி) பிரஷாந்தன் (யாழ்- இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. கனகசிங்கம், விநாயகமூர்த்தி ஆகியோரின் சகோதரருமாவார் அன்னாரின் பூதவுடல் 27-07-89 அன்று மாலை 4 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் பங்குகொண்டு, உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

44, ரெயில் றோட்,
கொக்குவில் கிழக்கு. (11641)

தகவல்.
து. கோமளேஸ்வரி

## மரண அறிவித்தல்கள்

### பர்னுந்து சுவாம்பிள்ளை (நவம்)

முன்னைநாள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பர்னுந்து சுவாம்பிள்ளை (நவம்) காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி பர்னுந்து (செக்கர்) ஆகியோரின் அன்பு மகனும், சண்முகேஸ்வரியின் அன்புக் கணவரும், முத்துராஜா, சூசைப்பிள்ளை (தபாற்கந்தோர், கற்பிட்டி), யோக்கின்பிள்ளை, சீமாம்பிள்ளை (நீர்ப்பாசன திணைக்களம், வவுனிக்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மிருசுவில்.
(11647)

தகவல்:
ச. சண்முகேஸ்வரி

### சூசைப்பிள்ளை கிறகோரி

இரணைப்பாலை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சூசைப்பிள்ளை கிறகோரி காலமானார். இவர் ரோஸ்மலரின் (மலர்) அன்புக் கணவரும், செல்வி அருள்மதியின் அன்புத் தந்தையும், அ. சூசைப்பிள்ளை திருமதி சூ. அந்தோனியாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 29ஆம் திகதி (இன்று) சனிக்கிழமை இரணைப்பாலையில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு. (1404)

## மரண அறிவித்தல்கள்

### நயினாதீவு
### கந்தர் குமாரசாமி (சின்னத்தம்பி)

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தர் குமாரசாமி (சின்னத்தம்பி) காலமானார். இவர் செல்லமுத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தியாகர் தம்பதிகளின் அன்பு மருமகனும், சி. க. தம்பையா (கிராம சபைத்தலைவர் நயினாதீவு) அவர்களின் சகோதரரும், அன்னலெட்சுமி, ஸ்ரீகாந்தராசா (உரிமையாளர் மகிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்), பத்மராணி (டென்மார்க்), விஜயகுலராஜா (லெபனான்), குமுதினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேந்திரம், கலா, சங்கரலிங்கம், பாலசுப்பிரமணியம் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29-7-89 இன்றுசனிக்கிழமை காலை நயினாதீவு 7ஆம் வட்டாரத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நயினாதீவு,
7ஆம் வட்டாரம்.

தகவல்:
இ. குருபரன்
(11636)

### நடராசா வசந்தகுமார்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா வசந்தகுமார் நோர்வேயில் அகால மரணமானார். அன்னார் நடராசா யோகசுந்தரியின் அன்புப் புதல்வரும், வசந்தமலர், வசந்தகலா, ஜீவகுமார், ரதீஸ்குமார், ஜெபானந்தகுமார், சிவதருசினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசாவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-07-1989 இன்று சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 12-00 மணிக்கு மணற்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்,

தகவல்:
ஏ. குணரட்ணம்

1ஆம் வட்டாரம்,
சந்தையடி,
புங்குடுதீவு. (1330)

### செல்லப்பா பொன்னுத்துரை

தட்டாதெருவைச் சேர்ந்த செல்லப்பா பொன்னுத்துரை அவர்கள் 27 - 7 - 89 இல் சிவபதமடைந்துவிட்டார். இவர் இராசமணியின அன்புக் கணவரும், வைத்திலிங்கம் (இளைப்பாறிய சிறுப்பர்), இராஜேஸ்வரி, காலஞ்சென்ற தங்கேஸ்வரி, பாலேஸ்வரி (லக்சலா), இராஜலிங்கம் (EXCELLENT MANUFACTURERS LTD), சாந்தலிங்கம் (கனடா -முன்னாள் புங்குடுதீவு ப. நோ. கூ. ச. கொள்வனவு உத்தியோகத்தர்], யோகேஸ்வரி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத்தந்தையும், சரஸ்வதி, சுப்பிரமணியம் (ஆயுள்வேத மருத்துவர் நீர்வேலி), அருணகிரி, ஜெகநாதன் (லிப்டன் - கொழும்பு), சரஸ்வதி, விமலாதேவி (கனடா), நாகேந்திரா [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், E. T. இளையதம்பி (வட்டுக்கோட்டை] தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தன் [விரிவுரையாளர் யாழ் வளாகம்], அருணன், அனுஷா, அனுலா, அசோகன், கமலேஸ்வரி, பாலகிருஷ்ணன், சகுந்தலா, விஜயன், மகிந்தன், டயனா, ஜெகன், சயந்தி, சர்மிலா, ஜானகி, ஜெனிதா, ஜனகன் ஆகியோரின் அன்புப் பேரனும். சுஜிதனின் பூட்டனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி கந்தசாமி கோவிலடி இல்லத்தில் இருந்து 30 - 7 -89 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நீர்வேலி தெற்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரா. சுப்பிரமணியம்.

நீர்வேலி கந்தசாமி கோவிலடி,
நீர்வேலி. (140ɛ]

### திரு. சி. தெட்சணாமூர்த்தி

(இளைப்பாறிய மின் உத்தியோகத்தர்,
கிராமசபை, திருநெல்வேலி)

நல்லூர் நாயன்மார் வீதியைச் சேர்ந்த சிவக்கொழுந்து தெட்சணாமூர்த்தி நேற்று (28-07-89) சிவபதமடைந்துவிட்டார்.

இவர் சுந்தரம்மாவின் அன்பு மகனும், இராசமலரின் அன்புக் கணவரும், கானசரஸ்வதி, சோமசுந்தரம், புஸ்பவதி [ஆசிரியை, கனகராயன் குளம் மகா வித்தியாலயம்], பாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மாணிக்கம், ஆறுமுகம், திருநாவுக்கரசு, செல்லத்துரை, சேதுநாதன் ஆகியோரின் சகோதரரும், எஸ். கதிரமலையின் (தெல்லிப்பழை) சகலனும், கலாவதி (புங்குடுதீவு), மைதிலி (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை [29-07-1989] முற்பக 11 மணிக்கு நடைபெற்று. பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தெ. சோமசுந்தரம் (மகன்)

45/14 நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (11646)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 295/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 07 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org